செ.வெ.எண்: 54 நாள்:24.10.2016

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் காலியாக உள்ள மருத்துவமனைப் பணியாளர் பணியிடத்தினை நிரப்பிட கீழ்க்கண்ட தகுதி உள்ளவர்கள் 10.11.2016 மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பிக்கலாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பணிக்கான இலவச விண்ணப்ப படிவங்களை புதுக்கோட்டை மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம். கல்வி தகுதி 8 ஆம் வகுப்பு தோல்வி அல்லது அதற்கு கீழ் நன்றாக எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். மேலும் மிதிவண்டி நன்றாக ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். கீழ்காண்ட இனங்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

(1) GT G.PRIORITY – 1 (2) MBC G.PRIORITY – 1 (3) BC G.PRIORITY -1 (4) GT DW-1 (5) SC G.PRIORIY -1 (6) MBC DW -1 (7) BC DW-1

பொது பிரிவினர் வயது உச்ச வரம்பு 30, பிற்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வயது உச்ச வரம்பு 32, ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர்களுக்கு வயது உச்ச வரம்பு 35 ஆகும். உச்ச வயது கணக்கிடும் தேதி 01.08.2016 ஆகும். விதிமுறைகளின் படி வயது வரம்பில் சலுகை உண்டு. நல்ல திடகாத்திரமான உடல் நலம் தகுதி உடையவர்கள் மட்டுமே இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்க முடியும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் காலியாக உள்ள மருத்துவமனைப் பணியாளர் பணியிடத்திற்கான இலவச விண்ணப்ப படிவத்தினை அலுவலக வேலை நாட்களில் பெற்று கல்வித்தகுதி சான்றிதழ், சாதிச்சான்றிதழ் நகல்கள் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவுச்சான்றிதழ் நகல்களை சுயசான்றொப்பம் இட்டு இணைத்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும். அஞ்சலக தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பேற்காது. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு. நேர்காணல் அழைப்பு கடிதம் பெறுவது மட்டும் வேலைக்கான உத்தரவு எனக் கருதக்கூடாது. நேர்காணலுக்கான நாள், நேரம் மாறுதலுக்கு உட்பட்டது. நேர்காணலுக்கு வரும் நபர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கு பிறகு தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேற்காணும் தகவலை மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.எஸ்.காமராஜ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**